# யாழ். மாநகரசபை குடிநலசுகாதார வாரம்

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலைசதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49 | மலர் 10
போன் 389 | இதழ் 106
National Tamil Daily | தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கீலக வைகாசி 14 ஸபர் 28 திங்கட்கிழமை (27-5-68)


## இன்று ஆரம்பம்

### ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளருக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், திங். யாழ்ப்பாண மாநகரசபை குடிநல சுகாதாரவாரவிழா இன்று ஆரம்பமாகின்றது. இலங்கையின் இரண்டாவது பெரிய நகரமான யாழ்ப்பாணத்தை, சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்திருக்க, வரியிறுப்பாளர் பெரும் அக்கறை கொண்டுள்ளனர்.

நான்காவது உலகத் தமிழ் மொழி ஆராய்ச்சி மகாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருப்பதால், நகருக்கு புதிய உருவும், திருவும் கொடுக்க ஒவ்வொரு வரியிறுப்பாளரும் ஊக்கத்தோடு உழைக்கவேண்டும் என்றும், யாழ் மாநகரசபையின் ஆணையாளர் திரு. வே. தங்கவேலு ஓர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தவிழாவின் நோக்கம் நகரை அழகுபடுத்துவதும், மக்களிடையே குடிநல—

[6-ம் பக்கம் பார்க்க]

★ தீவுப்பகுதி எம். பி. ★ பொருள் கட்டுப்பாடு ★ வடக்கில் வாநொலி

### தமிழரசு செயற்குழு பரிசீலனை

# வெள்ளை அறிக்கையின் பின் நிலைமையை ஆராய முடிவு

## எதிர்க்கட்சியினர் பகிஷ்கரித்தாலும் ......

### மாவட்டசபை வெள்ளை அறிக்கை பற்றி பட்டிருப்பு எம்பி

யாழ்ப்பாணம், திங். மாவட்டசபை பற்றிய வெள்ளை அறிக்கையை எதிர்க்கட்சியினர் பகிஷ்கரித்தாலும், பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெறுமென்று பட்டிருப்பு எம்.பி. திரு. எஸ். எம். ராசமாணிக்கம் நேற்றுத் தெரிவித்தார்.

திரு. இராசமாணிக்கம் மேலும் கூறியதாவது:—

மாவட்டசபை மசோதா எந்த ரூபத்தில் வந்தாலும் அதனை எதிர்க்க வேண்டுமென்பதற்காகவே எதிர்க்கட்சியினர் பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்துள்ளனர். மாவட்டசபை வரக்கூடாதென்பது தான் அவர்களது நோக்கம். அதனால் தான் இப்படி செய்கின்றனர்.

பாராளுமன்றத்தில் அரசாங்க கட்சி எம். பி. க்கள் வெள்ளை அறிக்கையைப் பற்றி விவாதிப்பார்கள். அதைப்பற்றி தங்கள் கருத்தை தெரிவிப்பார்கள்.

மாவட்டசபை பற்றிய வெள்ளை அறிக்கை அநேகமாக ஜூன் மாதம் முதல் வாரத்தில் வரும் என எதிர்பார்க்கிறோம்.

## மாவட்டசபை பற்றி காரசாரமான விவாதம்

யாழ்ப்பாணம், திங்கள்

பார்லிமெண்டில் மாவட்டசபைபற்றிய வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்ட பின்னர் ஏற்படும் அரசியல் சூழ்நிலைகளை அனுசரித்து நிலைமையைப் புனர் ஆலோசனை செய்வதென தமிழரசுக்கட்சியின் செயற்குழு நேற்று முடிவுசெய்தது.

இத்தகவலை கட்சியின் பொதுச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் பத்திரிகைகளுக்கு விடுத்த ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திரு. அமிர்தலிங்கம்தமது அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழரசுக்கட்சிசெயற்குழுக் கூட்டத்தில், மாவட்சபை மசோதா பாராளுமன்றத்தின் இக்கூட்டத் தொடரில் சமர்ப்பிக்க முடியாமல் போன காரணங்கள் விளக்கப்பட்டபோது காரசாரமான விவாதம் நடைபெற்றது. நீண்ட நேரம் விவாதித்த பின்னர் பாராளுமன்றத்தில் வெள்ளையறிக்கை விவாதிக்கப்பட்டதும் நிலைமையைப் புனராலோசனை செய்வதென தீர்மானிக்கப்பட்டது.

அடுத்த மாதம் 24ம் திகதி செயற்குழுக் கூட்டத்தை மட்டக்களப்பில் மீண்டும் கூடுவதென தீர்மானிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை மாவட்டக் கிளையால் அனுப்பப்பட்ட கடிதம் பரிசீலனை செய்யப்பட்டது. கடிதம்

(6-ம் பக்கம் பார்க்க)

## முன்னுள் செனட்டர் வெளியேறினர்

யாழ்ப்பாணம், திங். தமிழரசு செயற்குழுக்கூட்டத்திலிருந்து முன்னாள் செனட்டரும் செயற்குழு அங்கத்தவருமான திரு. ஜி நல்லையா வெளிநடப்புச் செய்ததாகத் தெரிகிறது.

சமூக குறைபாடுகள் ஒழிப்புச்சட்டம்பற்றி திரு. ஜி. நல்லையாவுக்கும் செயற்குழுக் கூட்டத்திலிருந்த ஒரு சமாதான நீதவானுக்குமிடையே நடைபெற்ற காரசாரமான விவாதத்தின் பின்னரே திரு.ஜி நல்லையா வெளிநடப்புச் செய்ததாகவும் அறியப்படுகிறது.

சமூகக் குறைபாடுகள் ஒழிப்பு சட்டத்தை மீறுவோருக்கு வழங்கப்படும் 3 மாத கால தண்டனையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென திரு.ஜி. நல்லையா ஒரு பிரேரணையைக் கொண்டுவந்ததாகவும் மாவட்டசபை வந்தால் இருபாலைமத் தமிழரையே அதிகம் பாதிக்குமென அஞ்சப்படுவதாக அவர் தெரிவித்ததாகவும் மாவட்டசபை மசோதாபற்றி பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படுமுன்னர், சமூக்குறைபாடுகள் ஒழிப்புசட்டத்தைத் திருத்த வேண்டுமென பாராளுமன்றத்தில் பிரேரணை கொண்டுவர வேண்டுமென திரு. ஜி நல்லையா கோரியதாகத்தெரிகிறது.

### ராஜினமா செய்வாராம்

செயற்குழுக்கூட்டத்திலிருந்து வெளியேறிய முன்னாள் செனட்டர் திரு ஜி. நல்லையாவை தமது சாரியா

[6-ம் பக்கம் பார்க்க]

## தீவுப்பகுதி 7 கிளைகள் செயற்குழுவுக்கு வரவில்லை

யாழ்ப்பாணம், திங்கள் தமிழரசுக் கட்சியின் செயற்குழு பட்டிருப்பு எம். பி. திரு. எஸ். எம். இராசமாணிக்கம் தலைமையில் நேற்றுக்காலை கூடிய போது, கட்சியிலிருந்து விலக்கப்பட்ட தீவுப்பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினத்தை மீண்டும் கட்சியில் சேர்க்கவேண்டுமென ஊர்காவற்றுறைக் கிளை நிறைவேற்றியிருந்த தீர்மானம்பற்றி விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

தீவுப்பகுதி எம். பி. கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதன்பின் முதல்தடவையாக நடைபெற்ற இக்கூட்டத்திற்கு புங்குடுதீவுக் கிளை மட்டுமே சமூகமளித்திருந்ததாகவும் இதர ஏழு கிளைகளும் சமூகமளிக்கவில்லையென்றும் தெரியவருகிறது.

உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் உட்பட முக்கிய தலைவர்கள் பலரும் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் மட்டக்களப்பு முதல் எம். பி திரு செ. இராசதுரை, மன்னார் எம். பி. திரு. வி. ஏ. அழகக்கோன், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் ஆகியோர் சமூகமளிக்கவில்லை.

###### மாவட்டசபை

## வெள்ளை அறிக்கையும் தமிழ்க்காங்கிரசும்

### பகிஷ்கரிப்பதா விவாதத்தில் கலந்துகொள்வதா?-9-ந்திகதி முடிவு

யாழ்ப்பாணம், திங்கள் மாவட்டசபை பற்றிய வெள்ளையறிக்கை விவாதத்தைப் பகிஷ்கரிப்பதா அல்லது விவாதத்தில் கலந்துகொள்வதா? என்பது பற்றி தமிழ்க் காங்கிரஸ் செயற்குழு அடுத்த மாதம் 9ந் தேதி முடிவுசெய்யும்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த தமிழ்க் காங்கிரஸ் குழுக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் வாலிப முன்னணி உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வெள்ளையறிக்கை வெளிவந்த பின்னர்தான் அதைப் பார்வையிட்டு அதுபற்றி முடிவுசெய்யலாமென கருத்துத் தெரிவித்தனர்.

வெள்ளையறிக்கை வெளிவந்த பின், வாரத்திற்கு ஒரு பிரசாரக் கூட்டம் நடத்தவேண்டும் என்றும் புதிய கிளைகள் ஆரம்பிக்க வேண்டும் என்றும் வாலிப முன்னணியினர் கேட்டுக்கொண்டபோது "நீங்கள் கூட்டங்களை ஒழுங்குசெய்தால் நான் ஒவ்வொரு நாளும் வந்து மாவட்டசபை பற்றி மக்களுக்கு விளக்கத் தயார்" என்று திரு. பொன்னம்பலம் தெரிவித்தார்.

வருடாந்த மகாநாடு பற்றியும் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது தற்பொழுதுள்ள அரசியல் சூழ்நிலை

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

வீட்டிலும் நாட்டிலும் அன்பின்றி சச்சரவுகள் வளர்வதற்குக் காரணம், மக்கள் தங்களிடையேயுள்ள ஆன்மீக உறவை உணராததுதான். ஆழ்ந்து நோக்கி இவ்வுறவை உணர்ந்தவர்கள் அன்பு வழி சென்று இன்பமடைவர். உலக ஒற்றுமையும் அமைதியும் ஏற்பட இது ஒன்றே சரியான வழி.

— சுவாமி ராமதாஸ்


ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANAD
Post Box: 49 Jaffna
Telephone 389

யாழ்ப்பாணம் கீலகவருஷம் வைகாசி மாதம் 14-ந்திகதி
(27-5-68)


## குடிநல சுகாதார வாரம்

யாழ்ப்பாண மாநகர சபை இன்று தொடக்கம் ஜூன் மாதம் 2-ம் திகதி வரை குடிநல சுகாதார வாரத்தைக் கொண்டாடுகிறது. நகரில் வாழும் மக்களுக்கு யாழ்ப்பாண நகரம் தங்களுடையதுதான் என்ற நகர உணர்வை ஊட்டுவதும் தாங்கள் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வாழ்வதுடன் நகரையும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துவதும்தான் இந்த குடிநல-சுகாதார வாரத்தின் நோக்கமாகும். இந்த நல்ல நோக்கத்தை நகர மக்கள் புரிந்து கொண்டு அதன்படி ஒரு வாரத்துக்கு மட்டுமல்ல எந்த நாளுமே நடந்துகொண்டு தமக்கும் தாம் வாழும் நகருக்கும் பெருமை தேடித்தர முன்வருவார்களென நம்பலாம்.

''நகரம் என்னுடையது, வீதி என்னுடையது, விளக்கு என்னுடையது, குடிதண்ணீர் என்னுடையது என்ற உணர்வு எல்லோர் உள்ளத்திலும் இருக்க வேண்டும்'' என்று இந்த குடிநல-சுகாதார வாரத்தையொட்டி யாழ்ப்பாண மாநகர சபை பதில் ஆணையாளர் திரு. வே. தங்கவேலு விடுத்துள்ள வேண்டுகோளில் கோரியுள்ளார். யாழ்ப்பாண மாநகரம் இப்பொழுது மாநகர சபையின் ஆட்சியின்றி விசேஷ ஆணையாளர்களின் நிர்வாகத்தின் கீழ் இருந்தாலும் 'நமது நகரம்' என்ற உணர்ச்சி நகரவாழ் மக்கள் அனைவரின் உள்ளத்தில் என்றும் நிலைபெற்றிருந்தால் நகரில் குப்பை கூளங்களோ வீதிகளிலும் ஓரங்களிலும் சேறும்சகதியுமோ காண முடியாமலிருக்கும். சிலருக்குக் குடிக்கத் தண்ணீர் கிடைக்காதபோது மற்றும் சிலர் குடிதண்ணீரை குளிப்பதற்கும், வாகனங்கள் கழுவுவதற்கும் உபயோகித்து வீணாக்கும் காட்சியையும் காண முடியாதிருக்கும்.

வீதிகளில் குறிப்பிட்ட இடங்களில் குப்பைத் தொட்டிகள் வைக்கவும், குடிதண்ணீர் இல்லாத இதர பகுதிகளுக்கு குழாய் நீர்த் திட்டத்தை விஸ்தரிக்கவும் மற்றும் நகரின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றவும் மாநகரசபையினர் முன்வர வேண்டும். இதே சமயம் தங்கள் வீடுவளவுகளையும் சுத்தமாக வைத்திருப்பதுடன் வீதிகளையும் அதன்மூலம் நகரத்தையும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்திருக்க மக்கள் முன்வந்தால் நகரம் சுத்தமாக இருப்பதுடன் வெளிநாட்டிலிருந்து வருபவர்களும் இங்கு வந்து செல்வதற்கு விரும்புவர்; மக்களும் நோய்வாய்ப்படாமல் தேகாரோக்கியத்துடன் வாழ்வர். இன்று தொடங்கும் வாரம் இதற்கு வழிகாட்டுமாக.

## ஆதாரக் கல்வி

நமது நாட்டுக்கேற்ற கல்வித்திட்டம் வேண்டுமென்ற குரல் பெற்றோர் தொடக்கம் கல்விமான்கள், அரசியல் வாதிகள் சகல, நமது நாடு விடுதலையடைந்தகாலத்திலிருந்து ஒலித்துக்கொண்டிருக்கிறது. நமது கல்வி அமைச்சர் பல நாள், பலநாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு வந்து தயாரித்த திட்டம்கூட நமக்குப் பொருத்தமாகஇல்லையெனக் கருதியதால் இன்னும்அமுலுக்குவரமுடியாமலிருக்கிறது. நாட்டுக்கேற்ற கல்விமுறைக்கு வழிகாணமுடியும் என்று அதைச்செயலில் காட்ட முன்வருவோருக்குக் கூட கல்விமான்களும், கல்வி இலாகாவினரும், அரசாங்கமும் ஆதரவும் ஒத்துழைப்பும் அளிக்கத் தயங்குவதுதான் ஏன் என்று புரியவில்லை.

அடிமைப்பட்டுக்கிடந்த இந்தியாவுக்கு மட்டுமல்ல இலங்கை உட்பட ஆசிய நாடுகள் பலவுக்கும் விடுதலை தேடித்தருவதற்குக் காரணமாக இருந்த மகாத்மா காந்தியடிகள் தேசவிடுதலைக்கென வகுத்த திட்டங்கள் யாவும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை. இவற்றுக்கு அடிப்படையாக அவர் வகுத்துச் செயல்படுத்தியது ஆதாரக்கல்வித்திட்டம். ஒவ்வொருவரும் கல்வி அறிவு பெறுவதுடன் பிறரை நம்பிவாழாமல் தம்மையே நம்பி வாழ்வதற்கு இத்திட்டம் வழிவகுக்கிறது. நமது நாட்டின் இன்றைய கல்வித்திட்டம் அந்நியர் இந்நாட்டை ஆட்சிசெய்யும்போது, தமக்கு வாய்ப்பாக, நாற்காலி உத்தியோகத்துக்கு இளம் சந்ததியினரை உருவாக்கும் திட்டமேயாகும். இத்திட்டத்தைமாற்றி நமது நாட்டுக்கேற்ற கல்விமுறை கொண்டுவரப்பட வேண்டுமென பலரும் குரல் எழுப்புகிறார்களே யொழிய செயலில் வழிகாட்ட எவரும்முன்வருவதாகத் தெரியவில்லை. செயலில் வழிகாட்டத் துணிந்து முன்வருவோருக்கும்கூட உதவியும் ஒத்துழைப்பும் கிடைப்பதில்லை என்பதை இன்றைய ஈழநாட்டின் பிறிதொருபக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள கிளிநொச்சி ஆதாரக்குருகுல நிர்வாகி திரு. வே. கதிரவேலு எழுதியுள்ள கட்டுரையில் மனவேதனையுடன் தெரிவிக்கிறார். அவர் கூறுவதுபோல் கிளிநொச்சியில் தொடங்கப்பட்டுள்ள ஆதாரக் கல்வித்திட்டத்துக்கு கல்விமான்களும் அரசாங்கமும் உதவியும் ஒத்துழைப்புமளித்து பரீட்சார்த்தமாகவாவது, அது நமது நாட்டுக்குப் பயன்தருமா என்பதை அறிந்துகொள்வதுமேல். ஆதாரக் கல்வித்திட்ட சூத்திரங்கு நடைபெறவிருக்கிறது. இக்கருத்தரங்கில் கல்விமான்கள், ஆசிரியர்கள் மட்டுமல்ல கல்வி அதிகாரிகளும் சரும் கலந்துகொள்வது பயனளிக்கக்கூடியது.

# 'கலை உலகம் காடாகக்கிடக்கிறது'

## யாழ். அரசாங்க அதிபர் கவலை

யாழ்ப்பாணம், திங்கள் 'கலையுலகம் இப்போது பெரிய காடாகவுள்ளது. யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல, கொழும்பிலும், லண்டனிலும், பாரிஸிலும் இந்நிலைதான். இந்தக்காட்டில் சாந்தா பொன்னுத்துரை போராட வேண்டியுள்ளார்' இவ்வாறு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா செல்வி சாந்தா பொன்னுத்துரையின் நாட்டிய அரங்கேற்றத்துக்கு தலைமைதாங்கிப் பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

'நாட்டிய அரங்கேற்றம் இதுவரை காலமும் பெற்றோர்களும், மற்றும் ஒரு சிலரும் பங்குபற்றும் ஒருநிகழ்ச்சியாகவே இருந்ததன்றி கலையின் மதிப்பைக் காட்டுவதாகவிருக்கவில்லை. சாந்தா பொன்னுத்துரை கலாக்ஷேத்திரத்தில் பயின்று முதல் தரமானபட்டம் பெற்றது ஒரு பெரிய நிகழ்ச்சியாகும். யாழ்ப்பாணத்திலும் அவர் மற்றவர்களுக்கும் பரதநாட்டியக்கலையைப் பயிற்றுவிக்க முயற்சி எடுப்பாரென நம்பலாம்.

'சிறந்த கலையான பரதநாட்டியத்தை பயின்றுள்ள சாந்தா பொன்னுத்துரை யாழ்ப்பாணக் கலையரங்கத்தில் சிறந்த பதவியொன்றை அடைவாரெனத் தாம் நம்புவதாகவும் கூறிய அவர், நாட்டிய அரங்கேற்றத்தை நிர்ணயிக்க ஒரு சபையும் அவசியம் அமைக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்தார்.

அடுத்துப் பேசிய திரு. கே. பி. ஹரன், 'சென்னையில் இருந்து கலைஞர்களை ஈழத்துக்குக் கொண்டுவருவது எவ்வளவோ பெரிய கஷ்டமாகவுள்ளதென்றும் அப்படியிருந்தும் இந்நாட்டிய அரங்கேற்றத்துக்குப் பக்கவாத்தியம் வாசிக்க இந்தியக் கலைஞர்களை வரவழைத்துள்ளது பாராட்டப்படவேண்டியது என்றும்குறிப்பிட்டார்.

கலையரசு சொர்ணலிங்கம் பேசுகையில், 'நாட்டியம், நாடகம், மற்றும் கலைத்துறைகளில் ஆர்வமுள்ளவர்களை முன்னேறவிடாது பெற்றோர்கள் தடுக்கிறார்கள் என்றும் இந்த நிலையில் சாந்தா பொன்னுத்துரை ஐந்துவருடங்காலம் முறைப்படி பரதநாட்டியத்தைப் பயின்றுள்ளாரென்றும் அதற்காக அவரின் பெற்றோரைப் பாராட்டவேண்டும் என்றும் கூறினர்.

தடலக்கலையாழ்ப்பாணத்தில் அதிக வளர்ச்சி அடைந்துள்ளதெனினும் யாழ்ப்பாணத்துக்குத் தென்னிலங்கைக் கலைஞர்களை அழைத்தும், யாழ்ப்பாணத்துச் சிறுமிகளை தென்னிலங்கைக்கு அழைத்தும் கலை நிகழ்ச்சிகளை நடாத்தினால் வடக்கு மாகாணத்துக்கும் தென்னிலங்கைக்குமிடையில் நேச உறவு வளரும் என்றும் கலையினால் ஏற்படக்கூடிய ஐக்கியத்தைப் போல் வேறெந்த விதத்திலும் ஒற்றுமை ஏற்படமுடியாது' என்றும் அவர் மேலும் கூறினர்.

திரு. நாவேந்தன் தமது நன்றியுரையில் யாழ்ப்பாணம் ஒரு கலைவளர்கின்ற பூஞ்சோலையாக மாறிவருகின்றது எனக் குறிப்பிட்டார்.

### இன்றைய பலன்

[27 - 5 - 68]

வைகாசி மீ 14 உ.

திங்கட்கிழமை

திதி - அமவாசை பகல் 1-11 மேல் பிரதமை.

நட்சத்திரம்-கார்த்திகை பகல் 7-47 மேல்ரோகிணி

ராகுகாலம் - 7-22— 8-52.

சுபநேரம் - 11-52— 1-22.

இன்று பிறந்தவர்களுக்கு- வருவாயில் மந்தநிலைக்கும், வீண் செலவுகளுக்கும் இடமுண்டு. ஆடம்பர வாழ்வு அதிக துன்பத்தைக் கொடுக்கும் குடும்ப வழியில் ஒரு முதியவரின் ஆதரவு மனதுக்கு நிம்மதியைக் கொடுக்கும் கல்வித்துறையிலும் குழப்பமான நிலையே காணப்படுகின்றது. இறை நம்பிக்கை இருப்பின் இப்பிறந்த ஆண்டு ஓரளவுக்கு நிம்மதியை கொடுக்கும்.

மேஷம்- பொருள் கைகிட்டுப்போகும், நிதானம் நன்று

ரிஷபம்- காகிதக்கப்பல் கரைசேரமுடியாது

மிதுனம்- வெள்ளிப் பணம் துள்ளும் வேண்டியது கிடைக்கும்

கடகம்-அன்னியர்களை ஆபத்துமுண்டு

சிம்மம்- வாகன நலன், வாழ்விலும் திருப்பம்

கன்னி-எண்ணம் போல் வாழ்வு, ஏற்றமுமுண்டு

துலாம்-அ ர ச ப ய ம், ஆயுத பீடை

விருச்சகம்-தென்றல் வீசும், தேன் சொட்டும் வாழ்வு

தனுசு-எதிர்பாராத தடை, கடன்படநேரிடும்

மகரம்-சுற்றம் சூழும், சுவையான வாழ்வு

கும்பம்-தொழில் நலன் தொடர்புகள் பெருகும்

மீனம்-நிதிவசதி, நிம்மதி பிறக்கும்.

சோதிடக்கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை

### 500 பேரில் ஒருவரே சித்தி

வெள்ளவத்தை, ஞாயிறு இலங்கை தபாற்தந்திப் போக்குவரத்துத் திணைக்கள எழுதுவினைஞர்களின் இரண்டாந்தர உயர்வுப் பரீட்சைக்குத் தோற்றிய 500 பரீட்சார்த்திகளுள் 34பேரே சித்தியடைந்துள்ளனர். இதில் தோற்றிய தமிழ் அரசாங்க எழுதுவினைஞர்களுள் பிரதம தபாற்கந்தோரில் கணக்காளக்கிட்டுக் கிளையைச் சேர்ந்த திரு. கந்தசாமி சுப்பிரமணியம் ஒருவரே சித்தியடைந்துள்ளார்.

மந்திகை தெருமூடி மடத்தடியைச் சேர்ந்த இவர் அஞ்சல் எழுதுவினைஞர் சங்க உறுப்பினர் ஆவார்.

### ஆயுர்வேத சங்க கூட்டம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு அகில இலங்கை சித்த ஆயுர்வேத வைத்திய சங்கத்தின் 37வது ஆண்டுக் கூட்டம் அடுத்த மாதம் 2ம் 3ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

## ஐயாறன் எழுதுவது

பரதநாட்டியத்துக்குப் பின்னணி பாட ஆண்குரல் தகுதியானதா, அல்லது பெண்குரலா? ஆணைவிடப் பெண்குரலே அதிக பொருத்தமானதென்றும், ஆடும் பெண்ணே தன் அபிநயத்துக்கேற்ப பாடுவது போல் அது இருக்குமென்றும் கருதினேன்.

ஆனால் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நகரமண்டபத்திலே நடந்த ஒரு மேலான பரதநாட்டியக் கச்சேரியில் ஆண்குரலும் பெண்குரலும் இணைந்து இனிமையாகப் பாடியதைக் கேட்டதும், இதுவே சிறந்த ஏற்பாடென்று தோன்றியது.

சென்னை கலாக்ஷேத்திரத்திலே ஐந்து வருடங்கள் பரதம் பயின்று முதல் வகுப்பு டிப்ளமா பெற்று வந்துள்ள சாந்தா பொன்னுத்துரையின் முதல்தரமான பரதநாட்டிய அரங்கேற்றத்தைப் பார்க்க, மண்டபம் தாங்கமுடியாத பெருங்கூட்டம். அரங்கேற்றமென்றால் இப்படித்தான் இருக்கவேண்டுமென்றும், அதற்கு எல்லாத் தகுதியும் செல்வி சாந்தா பெற்றுள்ளதாகவும்தலைமை வகித்த அரசாங்க அதிபர் அபயசேகரா சரியாகக் குறிப்பிட்டார்.

அரங்கேற்றத்துக்காக சென்னை கலாக்ஷேத்திரத்திலிருந்து மூன்று முதல்தர கலைஞர்கள் இங்கு வர முடிந்தது பெரிய காரியம். நட்டுவாங்கம்செய்த ஸ்ரீமதி கமலா ராணியுடன், சீதாராம சர்மா அவர்கள் கம்பீரமான குரலில் சேர்ந்து பாடியது, இங்கு பல வித்வான்களின் பாராட்டைப் பெற்றது. இப் பின்னணிப் பாட்டும், காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி அவர்களின் மிருதங்கமும், செல்வி தனதேவி சுப்பையாவின் வயலின், டி. பி. ஜேசுதாஸனின் புல்லாங்குழல் இவை சேர்ந்து, அதுவே ஒரு தனி கலைநிகழ்ச்சியாகப் பொலிந்தது.

சென்னையிலிருந்து வந்த கலைஞர்களுக்கு விஸா எடுக்க மிகவும் கஷ்டப்பட்டதாம். அங்கிருந்து கலைஞர்களை அழைத்தால் அது ஒரு தேசாபிமானமற்ற செயலென்று குற்றம்சாட்டும் அளவுக்கு சில குட்டி அதிகாரிகள் கேள்விகள் கேட்கிறார்களாம். வந்த கலைஞர்களை ஸி. ஐ. டி.க்காரர் சந்தேகித்து பலபல கேள்விகள் கேட்டதாகவும் புகார் கிடைத்தது. கலைவாணியே! உனக்கே எல்லாம் அர்ப்பணம். இவ்வளவு சங்கடங்கள் இருந்தும் இவர்களை வரவழைத்து அரங்கேற்றத்தை வெற்றிகரமாக நடத்திய பொன்னுத்துரை அவர்களைப் பாராட்டவேண்டும்.

கீ கீ கீ

பரதநாட்டிய சம்பிரதாயத்தை சிறிதும் வழுவாமல், உடை, அணிகள் முதலியவற்றை அணிந்து, நடராஜப் பெருமானை வழிபட்டு, பாவமும், உணர்ச்சியும் ததும்ப, மெய் சுத்தத்துடன் நடனமாடினார் செல்வி சாந்தா "அதி நாகரீகமாகவே".

அவர் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தவரென்பதை அறிந்தபோது எனக்கு மிக வியப்பும் மகிழ்ச்சியுமாக இருந்தது. மண்டபத்தில் கிறிஸ்தவ பாதிரிமார்கள் பலர் இருந்து கடைசிவரை நடந்ததைக் கண்டதும் நமது பரதநாட்டியக் கலை சமய வேற்றுமைகளை நீக்கி, சமரசப்பாலம் அமைக்

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரெஞ்சுத்தொழிலாளர்க்கு ஆகக்குறைந்த சம்பள உயர்வாக 36 சதவீதம்

## அரசாங்கம், முதலாளிகள், தொழிற்சங்கத் தலைவர்கள் மாநாட்டில் முடிவு

பாரிஸ், மே 26

பிரான்ஸில், அரசாங்கப் பிரதிநிதிகள், முதலாளிகள், தொழிலாளர் சங்கத் தலைவர்கள் ஆகியோர் நேற்று நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது, தொழிலாளர்களுக்குக் குறைந்தளவு ஊதியம் உயர்வாக 36சத வீதம் அளிப்பதென உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது. பிரெஞ்சுப் பிரதமர் திரு. பொம்பாடுவும் கலந்துகொண்ட இப்பேச்சுவார்த்தைகள், நேற்றிரவு நெடு நேரம் வரை நீடித்தன. பிரான்ஸில் ஏற்பட்டுள்ள தொழிற்துறை நெருக்கடியைத் தீர்க்கும் நோக்கத்துடனேயே இப்பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.

தொழிலாளர்களின் வேலை நேரமும் குறைக்கப்படலாம் எனப் பாரிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாட்டில் ஏற்பட்டுள்ள பலாத்காரச் சம்பவங்களை ஒரு முடிவுக்குக்கொண்டு வருமாறு மாணவர் தலைவர்களும், பொலிஸாரும் இணைந்து கேட்டுள்ளனர். கலவரங்கள் தொடங்கி நேற்றிரவுதான் முதற்தடவையாக பாரிஸ் நகரம் அமைதியாக இருந்தது.

நேற்றுப் பகல் நடைபெற்ற கலவரங்களின் போது 6 பேர் காயமுற்றனர். பொதுப் போக்குவரத்துச் சேவைகள் இன்னும் பாதிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளன.

வேலைநிறுத்தப் போராட்டத்தில், ரேடியோ, டெலிவிஷன் ஊழியர்களும் நேற்றுக் கலந்துகொண்டனர்.

ரேடியோ, டெலிவிஷன் செய்திகள் பாரபட்சமாக அமைந்துள்ளதாக அவர்கள் குற்றஞ்சாட்டினர். பொதுஜன வாக்கெடுப்பு நடத்துமாறு ஜனாதிபதி டிகோல் நாட்டுக்கு விடுத்த அழைப்புச் செய்திக்கு அதி முக்கியத்துவம் அளிக்கப்பட்ட அதே நேரத்தில், எதிர்க்கட்சித்தலைவர்களின் கருத்துக்களுக்கு இடமளிக்கப்படவில்லை என்றும் அவர்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

### தென்னியட்னுமில் தொழிற்சங்கங்கள்

நியூயோர்க், மே 26

தென்னாபிரிக்காவிலுள்ள தொழிற்சங்கங்களை அங்கீகரிக்குமாறு தென்னாபிரிக்காவை வற்புறுத்துமாறு இந்தியாவும், மற்றும் 5 ஆபிரிக்க நாடுகளும் ஐ. நா சமூக, பொருளாதாரக் கவுன்ஸிலிடம் கேட்டுக் கொண்டுள்ளன.

## தேர்தலின்பின் மோதல்

அளவெட்டி, ஞாயிறு

மயிலிட்டி கிராம சபைத் தேர்தலில் வெற்றியீட்டிய பகுதியினருக்கும், தோல்வியடைந்த பகுதியினருக்குமிடையில் ஏற்பட்ட சண்டை கோஷ்டிச் சண்டையாக மாறியதன் காரணமாக ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் மயிலிட்டி மூலையில் நடைபெற்ற இச்சம்பவம் சம்பந்தமாக எம். சிவமாலை, வி. மூத்தான், வி. நாகமணி, எம். ராசன், மூத்தான் சின்னன், மு. வேலன், சின்னத்தம்பி தவசி என அழைக்கப்படும் தங்கராசா ஆகியோரைக் காங்கேசன்துறைப் பொலிசார் கைதுசெய்து இன்று மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

நீதிபதி இந்நபர்களை பிணையில் செல்ல அனுமதித்து வழக்கை ஒத்திவைத்தார்.

தலையில் படுகாயங்களுக்குள்ளான முருகன் என்பவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

## கைக்கடிகாரத்தை திருடினார்

குரும்பசிட்டி, ஞாயிறு

ஏழாலை மயிலங்காடு வாசியான எஸ் முத்தையா என்பவர் சென்ற வருடம் ஒக்டோபர் மாதம் 24 ந் தேதி கத்தையா அருணகிரி என்பவருக்குச் சொந்தமான சுமார் 125 ரூபா பெறுமதியான கைக்கடிகாரத்தைக் களவாடியதாகச் சுன்னாகம் பொலிஸார் தொடர்ந்திருந்த வழக்கு மல்லாகம் நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு தீர்ப்பு வழங்குவதை நீதிபதி இம்மாதம் 28ந் தேதிக்கு ஒத்திவைத்தார். எதிரியின் கைவிரல் அடையாளம் பதிவுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். பொலிஸ்தரப்பில் சார்ஜண்ட் ரி. செல்லையா வழக்கை நடத்தினார்.

### பாடத்தொகுதி அபிவிருத்தி நிலையம்

கொழும்பு, ஞாயிறு

பாடத்தொகுதி அபிவிருத்தி நிலையமொன்றை கல்வி அமைச்சு நிறுவவுள்ளது. 8லட்சம் ரூபாய் செலவில் இது கொழும்பில் நிறுவப்படும். கல்விமந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை இதற்கான அத்திவாரக்கல்லை ஜூன் மாதம் 6ந் திகதி நாட்டுவார்.

## நோர்வேக்கடலருகே விழுந்து நொறுங்கியசோவியத்விமானம்

### அமெரிக்க விளக்கம்

வாஷிங்டன், மே. 26

நோர்வேக் கடலுக்கு அருகே நேற்றுச் சோவியத் குண்டுவீச்சு விமானமான 'டியூ 16' அமெரிக்க விமானந்தாங்கி கப்பலொன்றின் மீதாக மிகவும் கீழ்நோக்கிப் பறந்துசெல்கையில், விழுந்து நொறுங்கியதாக வாஷிங்டனில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் பற்றி வாஷிங்டனிலுள்ள அமெரிக்க அரசாங்கக் காரியாலயமான 'பென்டாகன்' செய்தி தெரிவிக்கையில், அமெரிக்கக் கப்பல் மீதாகக் கீழ்நோக்கிப் பறந்துசென்ற அந்தசோவியத் விமானத்தை அமெரிக்கக் கப்பல் பயமுறுத்தவோ அல்லது வேறெவ்விதத்திலும் இடையூறு செய்யவோ இல்லையென்று அறிவித்திருக்கிறது.

கடலிலிருந்து 3 சடலங்களை மீட்டுள்ளதாகவும் பென்டாகன் அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

## நைஜீரியாவில் ஒருபுறம் கடும் சண்டை

### மறுபுறம் உகாண்டாவில் சமாதானப் பேச்சுக்கள்

லாகோஸ், மே 26

நைஜீரிய சமஷ்டித் துருப்புகளும், பிரிந்த கிழக்கு நைஜீரியாவான 'பியாவ்ராத்' துருப்புகளும் கடுமையான போரில் ஈடுபட்டுள்ளன. இருசாராரும் அதிக உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளதாகப் பரஸ்பரம் தெரிவித்துள்ளன.

இதற்கிடையில், உகாண்டாத் தலைநகரான காம்பாலாவில், சமஷ்டி நைஜீரிய, 'பியாவ்ரா'ப் பிரதிநிதிகளுக்கிடையே சமாதானப்பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

சமாதானப் பேச்சுக்கள்

போர்நிறுத்தத்துக்கு முன்னதாக, அரசியற் பிரச்னைகளைத் தீர்க்கவேண்டியது அவசியமென சமஷ்டி நைஜீரியா வலியுறுத்தி வருவதாகவும், முதலிலே போர் நிறுத்தம் தான் தேவை என 'பியாவ்ரா' வற்புறுத்தி வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

நைஜீரிய உள்நாட்டுப் போருக்கு விரைவில் ஒரு தீர்வுகாண்பதற்கு இப்பேச்சுவார்த்தைகள் வகைசெய்யாவிடினும், அவை தோல்வியடையும் என்று சொல்வதற்கும் இல்லை எனக் காம்பாலா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### தந்தைகண்டித்ததால் மகன் தற்கொலை

யாழ்ப்பாணம், திங்கள்

பாடசாலைக்குச் செல்லாததற்கு தந்தை கண்டித்ததால் மகன் தற்கொலை செய்துகொண்டாராம். இப்பரிதாபமரணம் உரும்பிராயில் நடைபெற்றது.

மரணமான கதிரவேற்பிள்ளை என்ற 19 வயது வாலிபரின் மரணம் சம்பந்தமாக மரணவிசாரணை அதிகாரி திரு நா. இராசநாயகம் நேற்று மரண விசாரணை நடத்தினார். மரணமானவர் சம்பவம் நடந்ததினம் பாடசாலைக்குச் செல்லாது சிநேகிதர்களுடன் சீமைக்குச் சென்றதாகவும், இதனால் தந்தை கண்டித்ததால் கூடுதலான நித்திரைக் குளிசைகளை அவர் உண்டதாகவும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

தற்கொலைஎன மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார். (கா. நி)

### சைக்கிள், சம்பள பட்டியல் களவு

நல்லூர், ஞாயிறு

சுதுமலை அம்மன் கோவிலில் சாமி கும்பிட்டுக் கொண்டிருந்த தலைமை ஆசிரியர் ஒருவரின் சைக்கிளையும், பாடசாலை ஆசிரியர்களின் சம்பளப் பட்டியல் கொண்ட பை ஒன்றையும் இனந்தெரியாதவர்கள் திருடிக் கொண்டு போய் விட்டார்களாம் ஆனைக்கோட்டை பொலிஸில் தாவடி பாரதி வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் திரு. வி. ராசதுரை என்பவர் செய்துகொண்ட புகார் ஒன்றில் தெரிவித்துள்ளார்

வெளியில் தனது நவ சைக்கிளையும், பையையும் வைத்து விட்டு சாமி கும்பிட்டுக் கொண்டிருந்தபோதே இவைகள் களவாடப்பட்டதாக புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் புலன் விசாரணை செய்கின்றனர்.

### கிணற்றுள் கிடந்த சடலம்

யாழ்ப்பாணம், ஞா.

மகளைக் கர்ப்பவதியாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கொன்றில் எதிராகவிருந்து யாழ்ப்பாணம் சுப்ரீம் கோர்ட்டில் விடுதலை செய்யப்பட்ட ஒருவர் நேற்றுக் காலை கோண்டாவிலிலுள்ள கிணறொன்றில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

இம்மரணம் பற்றி மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரண விசாரணை நடத்தினார். மரணமானவர் யாழ்ப்பாணம் மாநகரசபைத் தொழிலாளியான கதிரன் செல்லன் [48] கடந்த இரண்டரை வருடங்களாக வீட்டுக்கு வரவில்லை என்றும் நேற்று முன்தினம் அவரின் தமையனின் வீட்டுக்கு வந்து வளவுக் கிணற்றுக்குள் குதித்து இறந்ததாகவும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணை அதிகாரி பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். [கா. நி]

இஸ்ரேலிய

## இராணுவ முகாமொன்றின் மீது தாக்குதல்

### 120 பேர் கொல்லப்பட்டதாக அரபுத் தளபதிகள் அறிவிப்பு

ஜெருசலம், மே 26

ஜெரிக்கோ நகருக்கு வடகிழக்கே, இராணுவ முகாமொன்றின் மீது நடத்திய தாக்குதலில், 120 இஸ்ரேலியர் கொல்லப்பட்டனர். அல்லது காயப்படுத்தப்பட்டனர் என அரபு கொரில்லாப் படைத் தளபதிகள் அறிவித்துள்ளனர்.

இராணுவ முகாமில் இருந்த டாங்கிகள், மற்றும் இராணுவ வாகனங்களும் சேதப்படுத்தப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேல் வட்டாரங்கள் இச்சம்பவம் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. ஆனால், அரபுக் கொரில்லாக்களுடன் நடந்த கைகலப்பொன்றில் மூன்று அரபுத்தளபதிகளும் ஒரு இஸ்ரேலியப் போர் வீரரும் கொல்லப்பட்டதாக இஸ்ரேலியர் தெரிவித்துள்ளனர்.

### இஸ்ரேல் — ஜோர்தான் துருப்புகள் மோதல்

நான்கு தடவை சுட்டனர்

அம்மான், மே 26

ஜோர்தான் ஆற்றுக்குக் குறுக்கே, இஸ்ரேல் துருப்புகளும் ஜோர்தான் துருப்புகளும் நேற்று நான்கு தடவை பரஸ்பரம் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டன.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் தமது பக்கத்தில் ஆட்சேதம் இல்லை என்று டெல் அவிவ் வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

### கப்பல் விபத்தில் 16 பேர் மரணம்

தென் கோரியாவில் சம்பவம்

சியோல், மே 26

தென்கொரியாவில் ஓர் ஆற்றில் சென்றுகொண்டிருந்த கப்பலொன்று கவிழ்ந்ததன் விளைவாக, 16 பேர் உயிரிழந்தனர். மற்றும் சிலர் காயத்துக்குள்ளாகினர்.

அளவுக்கதிகமான பிரயாணிகளை ஏற்றியதன் விளைவாகவே இக்கப்பல் கவிழ்ந்ததாகப் பொலிசார் அறிவித்துள்ளனர்.

### ரஷ்யப் பிரதமர் தாயகம் திரும்பினார்

மாஸ்கோ, மே 26

ரஷ்யப்பிரதமர் திரு. கொஸிஜின், தமது செக்கோஸ்லாவாக்கிய விஜயத்தைமுடித்துக்கொண்டு மாஸ்கோ திரும்பியுள்ளார்.

செக்கோஸ்லவாக்கியாவில் திரு. கொஸிஜின் தங்கியிருந்த சுமார் இருவாரகாலத்தில், அதிக நாட்களை அவர், சிறிது சுகவீனம் காரணமாக, அங்குள்ள சுகாதார விடுதியொன்றில் ஓய்வு எடுப்பதில் கழித்தாரெனினும், செக்கோஸ்லவாக்கியத் தலைவர்களுடன் முக்கிய பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.

### 50 கலகநாகர் கொல்லப்பட்டனர்

பர்மிய எல்லையில்

கொஹிமா, மே 26

பர்மிய எல்லையைக் கடக்க முயற்சித்த கலக நாகர் 50 பேர், பர்மியப் படையினரால் கொல்லப்பட்டதாக இங்கு கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வித் திட்டம் உடனடியாக மாற்றப்படவேண்டும் என்பதையும், அது நாட்டின் தேவைக்கு உதவவும், மாணவர்களின் இயற்கைத் தூண்டுதல்களை விருத்திசெய்யவும், குழந்தைகளின் உயர் பண்பாட்டு வளர்ச்சிக்கு உதவவும், மனம், உடல், ஆத்மா என்ற மூன்றின் தொழிற்பாட்டுக்கு உதவவும் மாற்றப்படவேண்டும் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. எல்லாக் கல்வி நிபுணர்களும் இந்த இலக்கை மனதில் வைத்துக்கொண்டு பத்திரிகைகளில் எழுதியும், மகிரங்கக் கூட்டங்களில் பேசியும் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். கல்வி மந்திரி காரியாலய ஒழுங்கில் கல்வி இலாகாவும், கல்வி மாற்றத்துக்கு ஒரு சிறு அடியெடுத்து வைத்துள்ளது. இலங்கையிலுள்ள எந்தக் கல்வி நிலையமும் மேற்போந்த பல குறிக்கோளை அடிப்படையாக வைத்து நடாத்தப்படுவதாயில்லை. மெக்காலேவகுத்த அரசாங்க நிர்வாக ஒழுங்குக்காக மாத்திரம் வகுக்கப்பட்ட-உத்தியோகத்தை மாத்திரம் பூர்த்திசெய்வதற்க்க தயாரிப்பு நிறைந்த பழைய பயனற்ற கல்வித்திட்டத்தையே சுதந்திரம்பெற்றுப் பல வருடங்களாகியும் அமுல்நடத்திக் கொண்டிருக்கிறோம். நாட்டில் கல்வி மாற்றத்தால் ஏற்பட்ட சமூக மாற்றம் எதையும் காணவில்லை அதற்குப் பதில் மக்களிடையே ஒழுக்கக் கேடும், பொறுப்பற்ற தன்மையும், தன்நம்பிக்கை இழப்பும், வேலையில்லாத் திண்டாட்டமும், வீணாக நேரத்தைப் போக்குதலும் பூதம்போல் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் படித்த கல்விமான்கள் யாவரும் மௌனம் சாதித்துக் கொண்டு எதுவோ நடக்கட்டும், எமது காலம் போகட்டும் என்றிருப்பது முறையாகுமா? எதிர்காலத்தில் எல்லோரும் உத்தியோகக் கல்விக்காகப் படித்து இலவு காத்த கிளி போலாவதைப் பார்த்து வேடிக்கையாகச் சிரிப்பதா? நிச்சயம் மாணவர்கள் எல்லோரும் திரண்டு இந்தக் கல்வித் திட்டத்தை மாற்றுங்கள் என்று படையெடுக்கும் நிலை வரும் வரையும் பொறுத்துக் கொண்டிருப்பதா? அவர்கள் வேலையற்றுச் சீவனோபாயத்துக்குவழியின்றியிருக்கும்பொழுது அவர்களின் உள்ளம் துடிக்காதா? நிச்சயம் புரட்சிசெய்தேயாவார்கள் என்பதை இப்பொழுதே கூறவிரும்புகிறேன்.

கர்மத்துக்கும், ஞானத்துக்கும் இணைப்பை ஏற்படுத்தினர் வேத ரிஷிகள். அமுலில் இருக்கும் இக்கல்வித் திட்டம் அமுல்செய்யப்படமுன் நமது நாட்டிலேயே நடந்த திண்ணைப் பள்ளிக்கூடங்களும், குருகுலங்களும் எத்தனைப் பெரியோர்களையும், ஆக்கசிலரையும், ஒழுக்கசீலரையும் ஆக்கித் தந்தன. வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பிரச்சினையே அந்த நாளில் இல்லை. என்றைக்கு உத்தியோகக் கல்வி ஆரம்பித்ததோ அன்றே பல பிரச்னைகளும் தோன்றத் தொடங்கின.

இதே பிரச்சினைகள் யாவும் நமது தாய் நாடாய இந்தியாவிலும் அமைந்துள்ளதே. இதை கண்ணுற்ற மகாத்மா காந்தியடிகள் ஆதாரக்கல்வித் திட்டத்தை இந்தியாவுக்கும், அகில உலகத்துக்கும், பட்டினம், நகரம், கிராமம் என்ற பேதமின்றி அமையக்கூடியதாய் வகுத்தார். பிள்ளைகளுக்கு வேண்டிய அறிவை நேரனுபவமூலம் கொடுக்கும்முறையைக்கையாண்டார். செயல்மூலம் கல்வி செயலில் இருந்து உருப்படியான பொருள்பற்றி நேரனுபவமூலம்

# ஆதாரக் கல்வித் திட்டத்துக்கு ஆதரவுதரத் தயங்குவதேன்

## காந்தி நூற்றுண்டு விழாசமயத்தில் அவர் காட்டியவழியை ஆராய்வோம்

— வே. கதிரவேலு - நிர்வாகி - ஆதாரக்கல்விக் குருகுலம் —

அறிவுவிளக்கம் என்ற ரீதியில் பின்னிப் பிணைத்துக் கல்விமுறையை மாற்றியமைத்தார். ஆன்ம ஞானமும் விஞ்ஞானமும் இணைந்து புகட்டப்பட்டு ஒரு உயர்ந்த சமூக ஞானம்-சர்வோதயம் - ஏற்படுதலே தற்காலக் கல்விக்கொள்கைக்கிசைந்த உயர் இலக்காகும் என்றார். இக்கல்விமுறை நம் நாட்டுக்கும் உகந்தமுறையே என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

### ஆதாரக்கல்வி குருகுலம்

இதைக் கவனித்த எனுள்ளம் அக்கல்வித்திட்டத்தைக் குறித்து ஆராய விரும்பியது. அதற்காக இந்தியா சென்று அத்திட்டத்தைப் படிக்க விரும்பினேன். மிகவும் கஷ்டப்பட்டு ஐந்து ஆண்டுகள் அரசாங்கத்துடன் வாதாடி இறுதியில் சம்பளமற்ற லீவில், இந்தியா சென்று ஏறக்குறைய ஒரு வருடம் மேற்படி கல்வித் திட்டத்தைப் படித்து வந்தேன். எந்தவும் அக்கல்வித்திட்டத்தை ஆக்கபூர்வமான நிலைக்குச் கொண்டுவர வேண்டுமென்று ஆசைப்பட்டுக் கல்வி இலாகாவுடன் வாதாடிக் கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயத்திலுள்ள மற்றைய உதவியாசிரியர்களின் பெருந்துணைகொண்டு அக்கல்வித் திட்ட முறையில் எமது நாட்டின் கல்வியறிவை மாணவர்களுக்குப் புகுத்த முற்பட்டுள்ளோம். அத்திட்டத்தை உருப்படுத்த அப்பாடசாலையின் அயலில் கரைச்சிச் சைவவித்தியா விருத்திச் சங்கத்துக்குச் சொந்தமான ஐம்பது ஏக்கர் காணியில் ஆதாரக் கல்விக் குருகுலத்தை நிறுவி மேற்படி கல்வித்திட்ட அமுலுக்கு அனுசரணை செய்துள்ளோம். இக்குருகுலத்தில் 60 மாணவ மாணவிகள் தங்கியிருந்து உணவுபெற்றுக் கல்விபயில்கின்றனர்.

### ஆதரவுகிடைக்கவில்லை

இது இப்படியிருக்கக் இக்கல்வித் திட்டம் தேடுவாரற்றுப் பாராமுகப்படுத்தப்பட்டு அரசாங்கத்திட்டத்தினால் நசுக்கப்பட்டுக் கொண்டிருப்பதனால் நாம் மிக்வும் மனம்சோருகின்றோம். கல்வியாளரின் அரவணைப்போ ஒரு சிறிதும் இல்லை இந்த நாட்டுக்கு இக்கல்வித் திட்டம் ஏற்றதா ஏற்காதா என்பதைக் கல்விமான்கள் சிந்திக்கவேண்டாமா? இக்கல்லூரியிலாவது பரீட்சார்த்தமாக இத்திட்டத்தை அமுல் நடாத்த வழிவகுத்துத்தர வேண்டாமா? ஆதாரக்கல்வித்திட்டம் இந்த நாட்டுக்கு ஏற்காதென்றால் ஒரு புதிய திட்டத்தைக் காரிய சாத்தியப் படுத்தி பரீட்சிக்கக் கல்விமான்கள் துணியவேண்டாமா. அகில இலங்கை ரீதியில் அறிவைப் புகுத்த முயற்சிக்கும் கல்விக்கொள்கையில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் கல்வியமைய வேண்டிய விதத்தை ஆராயச் சந்தர்ப்பமிருக்க வேண்டாமா? எல்லோரையும் ஒரே அச்சில்வார்க்கும் கல்விக்கொள்கையுடன் மாணவர்களுக்குரிய சிறப்பியல்புகளை வளர்க்கும் ஆராய்வும் நடத்த வேண்டாமா? கல்வி இலாகாவும் முக்கியமாக இவ்விடயத்தில் பங்குகொள்ளவேண்டும் என்பதைக் கல்விஉத்தியோகத்தர்களுக்கும் சமர்ப்பிக்கின்றோம், மாணவர்களுக்காகப் புத்தகம் எழுதும் கல்விக்கிளை செயல்மூலம் அறிவை புகுத்தும் முறையில் எழுதும்படி அதாவது ஆதாரக் கல்வித்திட்ட முறையில் புத்தகங்களை எழுதும்படி தூண்டக் கூடாதா?

### கல்விமான்களும் கவனிக்கவில்லை

இவற்றைக் கல்விமான்கள் மத்தியில் சமர்ப்பிக்க வேண்டும் என்று கருதி ஆதாரக் கல்விக் கருத்தரங்கு ஒன்று நடாத்த முற்பட்டு அக்கருத்தரங்கில் கலந்துகொள்ளும்படி பத்திரிகைகள் மூலமும் கடிதங்கள் மூலமும் வெளிப்படுத்தினேம். இரண்டொருவரைத் தவிர யாரும் ஆதாரக் கல்விக்குருகுல நிர்வாகிகளுடன் தொடர்பு கொண்டதாயில்லை. அக்கல்விக் கருத்தரங்கில் பின்வரும் விடயங்களையிட்டுக் கலந்தாலோசித்து ஒரு முடிவுக்கு வரக் கல்விமான்களும் ஆசிரிய சங்கங்களும் ஆசிரியர்களும் ஏன் இன்னும் முற்படவில்லை? இந்தப் பராமுக மனப்பான்மை ஆசிரியராய எமக்கு பாவமூட்டையை மேலும் மேலும் கூட்டித் தராதா? கிளிநொச்சிப்பகுதி ஆசிரியர் சங்கத்தில் கருத்தரங்கை நடாத்தும் பொறுப்புத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கருத்தரங்கில் பேசக்கூடிய விடயங்கள் பின்வருனவாய் அமையலாம்.

1. நம் நாட்டுக் கல்வி மாணவர்களுக்கு எவ்வறிவைத் தரவேண்டும்?

2. ஆதாரக் கல்வித் திட்டம் நமது நாட்டுக்கு உகந்ததா?

3. பாடசாலைகளில் செயலையும் அறிவையும் இணைப்பதெப்படி?

4. அரசாங்க அனுமதியுடன் நாட்டின் தேவைக்கேற்ற கல்விப்பரீட்சார்த்த நிலையம் எப்படி அமையலாம்?

5. கிராமம், பட்டினம், மாநகரங்களில் கல்வி எப்படி அமைதல் வேண்டும்?

6. சுயகரும முறை, ஒப்பந்த முறை, பாலர்கள முறைகளை ஏற்றுக்கொண்ட கல்வி இலாகா இத்தனையுமடக்கிய ஆதார கல்வி முறையை ஏற்றுக்கொள்ள தாமதமேன்?

7. கல்வி முறையை ஆராய முனைபவர்களுக்கு அரசாங்கம் எப்படி உதவலாம்?

8 நமது நாட்டில் கல்வியாராய்வுச்சபை நிறுவுவது அவசியமா?

என்பனபோன்ற சிலகருத்துக்கள் கருத்தரங்கில் நிச்சயம் இடம்பெறலாம். ஆதலால் கல்விமான்கள் யாவரும் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு கருத்துள்ள கல்விக்கொள்கையை உருவாக்க முன்வரும்படி கேட்டுக்கொள்கின்றோம். கூடிய விரைவில் கருத்தரங்கை நடாத்துவோம். கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயத்தின் தலைவரும் கிளிநொச்சி ஆதாரக்கல்விக் குருகுல நிர்வாகியுமாகிய எம்முடன் தொடர்பு கொண்டு கருத்துக்கள். கலந்துபரிமாறி ஒரு முடிவுக்கு வருவோம். தக்கதைச்செய்யும்பொழுது அரசாங்கமும் எமக்கு உதவாதிருக்கமுடியாது. காந்தி நூற்றுண்டு விழாக் கொண்டாட முற்படும்நாம் அவரின் திட்டங்கள் யாவும் சமூகமாகும் சமுத்திரமாய ஆதாரக்கல்வித் திட்டத்தை ஆராயவேண்டாமா?

## ரூபா 5000 செலவில் கொடிஸ்தம்பம்

அளவெட்டி, ஞாயிறு

மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவிலில் கொடியேற்றுவிழா உபகாரரால் நவீன முறையில் சித்திர தேலைப்பாடு அமைந்த கொடி ஸ்தம்பம் ஒன்று 5000 ரூபாய் செலவில் அமைக்க இருப்பதாக கோவில் முகாமையாளர் சி. கணபதிப்பிள்ளை தெரிவித்தார்.

## "இன்றைய விஞ்ஞானக் கல்வி முருங்கையடி சாத்திரம்"

### பருத்தித்துறை எம். பி. கூறுகிறார்

கல்வெட்டித்துறை, ஞாயிறு

"இன்றைய விஞ்ஞானக் கல்வி கல்லூரி ஆய்வுக்கூடங்களுக்குள்ளேயே அடங்கி விடுகிறது. இது 'முருங்கை மரத்தடி சாத்திரம்' போல் இருந்து விடுகிறது. இலங்கையில் முதல் தடவையாக இந்த நீர் உயிரியல் ஆய்வு கூடம் இயங்க இருப்பதால் இளைஞர்கள் மத்தியில் ஆராய்ச்சி செய்வதற்கு மிகவும் உதவக்கூடியதாக விருக்கிறது. இஸ்ரேல் போன்ற நாடுகளில் உப்புநீரை இளம் விஞ்ஞானிகள் சில பயிர்களுக்கு பாய்ச்சி அதன்மூலம் பயனடைந்து வருகின்றனர். அதேபோன்று இங்குள்ள உப்புநீரை ஆராய்ந்து அதற்கேற்ற பயிர்களை வளர்ப்பதற்கு இந்த ஆய்வுகூடம் வழிவகுக்கும்."

இவ்வாறு பருத்தித்துறை எம்.பி. திரு கே துரைரத்தினம் நீர் உயிரியல் ஆய்வு கூட ஆரம்ப விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண் பாடசாலையில் நடைபெற்ற இவ்விழா யாழ். அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் நடைபெற்றது.

தொண்டமானாற்றில் நீர் உயிரியல் ஆய்வுகூடம் ஒன்றை அமைப்பதற்கான ஆரம்பவிழாவே இங்கு நடைபெற்றது.

## பட்டப்பகலில் கடைக்காரர் கொலை

கொழும்பு, ஞாயிறு

கொழும்பு கொல்பேஸ் நகைக்கடைச் சொந்தக்காரரான 65 வயது ஆசிஸ் நேற்றுப் பிற்பகல் அவரது கடையில் கையும் காலும் கட்டப்பட்டு மாண்டு கிடக்கக் காணப்பட்டார்.

இக்கொலை சம்பந்தமாக ஆசிஸின் நண்பர் ஒருவரும் அவரது கடை உதவியாளர் ஒருவரும் சந்தேகத்தின்மீது கைது செய்யப்பட்டுள்ளனர். மற்றுமிருவரையும் பொலிசார் தேடி வருகின்றனர்.

## அழகு வாய்ந்த யாழ்நகர்

### போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பமாகும் 'குடிநல சுகாதாரவாரத்தை, யொட்டி' அழகு வாய்ந்த யாழ்நகர்' என்ற தலைப்பில் 'ஈழநாடு' நடத்திய கவிதை, கட்டுரைப் போட்டிக்கு வரப்பெற்ற பல கவிதை, கட்டுரைகளில் முதலிடம் பெறும் கவிதை, கட்டுரைகளை எழுதியவர்களின் பெயர் விபரம் கீழே தரப்படுகிறது. போட்டி 14 வயதுக்குட்பட்டோர், 19 வயதுக்குட்பட்டோர். வயதுக் கட்டுப்பாடில்லாதபொது என மூன்று பிரிவுகளாக அமைந்திருந்தது.

கவிதை (பொது)ப் போட்டியில் அல்வாய் வடக்கைச் சேர்ந்த துளசிதாசன் எழுதிய கவிதை பரிசுக்குரியதென தெரிவுப்பட்டது.

கட்டுரைப்போட்டிக்கு எதிர்பார்க்கப்பட்டது போல் தரமான கட்டுரைகள் வந்து சேரவில்லை. எனினும் பொதுப் போட்டியில் கொழும்புத்துறை சுவாமியார் வீதியைச்சேர்ந்த மு. கனகசபையும் 19 வயதுக்குட்பட்டோர் பிரிவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியைச்சேர்ந்த ந. ஸ்ரீகாந்தாவும் எழுதியகட்டுரைகள் பரிசுக்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்டன.

14 வயதுக்குட்பட்டோருக்கான போட்டிக்கு வந்த கட்டுரைகளும் கவிதைகளிலும் 19 வயதுக்குட்பட்டோருக்கான போட்டிக்கு வந்த கவிதைகளும் பரிசுபெறும் தகுதியற்றனவாக தீர்மானிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

வல்வை மகிஸ்ரால் விளையாட்டுக் கழக வருடாந்த விளையாட்டுப் போட்டி 10-6-68 நெடியகாடு சிறுவர் மைதானத்தில் நடைபெறும். சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், நீச்சல் ஆகியன நடைபெறும்.

இதுசம்பந்தமாக தொடர்பு கொள்வோர் 6-6-68 முன் கீழ்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

விலாசம்

K. சண்முகலிங்கம்,
மணல்வளவு,
690 வல்வெட்டித்துறை.

## செம்பியன்பற்று கிராமசபை கேள்விப்பத்திர அறிவித்தல்

செம்பியன்பற்றுக் கிராமசபைத் தலைவரால் வெள்ள நிவாரண தன் கொடை வேலைக்கான கேள்விகள் 9-6-68 காலை 10 மணிவரை முதல்தர பதிவுக் கொந்தராத்துக்காரரிடமிருந்து ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் 7-6-68 பி. ப. 2 மணிவரை ரூபா 50-00 கேள்விப் பிணையாகவும் ரூபா 10-00 பத்திரங்களுக்காய கிரயமாகவும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

மற்றும் விபரங்களைச்சபை அலுவலகத்திலும் யாழ். உள்ளூராட்சி அமைச்சின் செயலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

ஐ. ஆ. ஐயம்பிள்ளை,
கி. ச. தலைவர்.
கிராமசபை,
செம்பியன்பற்று.
24-5-1968. 692

## விளம்பரம்

### கட்டைவேலிகிராமசபை

கீழ்க்காணும் வேலைகளுக்கு 1968-ம் ஆண்டு ஆனி மாதம் 12-ம் திகதி புதன்கிழமை பகல் 12 மணி வரையும் கேள்விகள் அழைக்கப்படுகின்றன. கேள்விப் பத்திரங்கள் ஆனி மாதம் 11ம் திகதி பகல் 12 மணி வரையும் வழங்கப்படும். ஏனைய விபரங்கள் யாவும் கந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

வேலைகள்

1. வட்டுவத்தைஒழுங்கை [கி. ச. கூடுதோருக்கு முன்னால்]
2. கிராமசபைக் கந்தோரில் கிணறு.

க. முருகவேள்,
நிர்வாகஸ்தர்.
கட்டைவேலி கி. ச.
கந்தோர், அல்வாய்.
23-5-68. 691

## சமமான முடிவு

குரும்பசிட்டி, ஞாயிறு

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையே வார இறுதியில் நடைபெற்ற சினேகபூர்வமான இரண்டாம் பிரிவுக் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது. இப்போட்டி சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் விளையாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி வீரர் தமது முதல் இன்னிங்ஸில் எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 106 ஓட்டங்களை எடுத்தனர். ஸ்கந்தவரோதயா தனது முதல் இன்னிங்ஸில் எல்லா விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 167 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் பாலச்சந்திரன் என்ற வீரர் 102 ஓட்டங்களை கைப்பற்றினார். இரண்டாவது இன்னிங்ஸில் சென். ஜோன்ஸ் 8 விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 70 ஓட்டங்கள் எடுத்த நிலையில் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

## கேள்விவிளம்பரம்

### அச்சுவேலி சந்தைக் கடைக் கட்டடம்

மேற்குறிப்பிட்டவேலைக்கு "சீல்" வைத்த கேள்விப் பத்திரங்கள் அச்சுவேலிக் கிராமசபைத் தலைவரால் 8-6-68ம் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப் பிணைப்பணம் ரூபா 25/-ம், பத்திரப் பணம் ரூபா 5/-ம் கட்டியதன் பேரில் 6 6-68ம் திகதி நண்பகல் 12-00 மணிவரையும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

ஏனைய விபரங்கள் கிராமசபைக் கந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

சி.த. சபாரத்தினம் ஜே.பி.,
தலைவர்,
கி. ச. அச்சுவேலி.
கிராமசபைக் கந்தோர்,
அச்சுவேலி,
24-5-68. 693

## இருகார் சாரதிகள்கைது

அளவெட்டி, ஞாயிறு

நேற்று நடைபெற்ற தெல்லிப்பழை கிராமசபைத் தேர்தலில் வாக்காளர் சிலரைக் காரில் ஏற்றிச்சென்றதாக இரு சாரதிகளை காங்கேசன்துறைப் பொலிசார் கைது செய்தனர்.

இவர்கள் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். காரும் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

## வள்ளுவர் விழா

யாழ்ப்பாணம், திங்கள்

இருபாலை மத்திய சனசமூக நிலையம் எதிர்வரும் ஜூன் மாதம் 9-ம் திகதி வள்ளுவர்விழா வைக்கொண்டாடவிருக்கிறது. இவ்விழாவையொட்டி கட்டுரை பேச்சுப் போட்டிகளை நடத்திப் பரிசுகள் வழங்கவிருக்கிறது.

## பிரிவிலும் ஐக்கியம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

கணவனும் மனைவியும் ஒரேதினத்தில் மரணமான சம்பவம் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த சரவணைப்பகுதியில் நடைபெற்றுள்ளது.

சரவணையைச் சேர்ந்த பசுபதிப்பிள்ளை செல்லையாவும், அவருடைய மனைவி சொர்ணம்பிகையுமே ஒரே தினத்தில்மரணமானவர்களாவர்.

இவர்கள் இருவரும் சில நாட்களாக சுகவீனமுற்றிருந்ததாகவும், பகல் பன்னிரண்டுமணியளவில் மனைவி இறந்ததாகவும், சிறிதுநேரத்தில் கணவனும் மரணமானதாகவும் தெரிய வருகிறது. சரவணை புல்லம்பிட்டி மயானத்தில் இரு சடலங்களும் ஒரே சிதையில் வைத்து தகனம் செய்யப்பட்டது.

## தற்கொலை

உடுவில் ஞாயிறு

பலவருடங்களாக நோயினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தவர் நோய்தாங்கமுடியாத நிலையில் தற்கொலை செய்து கொண்டார். இச்சம்பவம் நேற்று முன்தினம் சாவிப்பாய் வடக்கில்நடைபெற்றுள்ளது. மானிப்பாய் வடக்கு வாசியான வேலுப்பிள்ளை சின்னத்தம்பி அல்லது பொன்னுத்துரை என்பவரே தற்கொலை செய்து கொண்ட நபராகும்.

மரணவிசாரணையின் போது இறந்தவரின் மனைவியாகிய திருமதி பூரணம் சாட்சியமளித்தார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. கே. சேனாதிராசா மரணவிசாரணை நடத்தினார். தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 27-5-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் அல் 61 மீற்றர் காலை 6-30 நாதாஞ்சலி, 6-35லை சுவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 பக்திப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 8-00 திரைகானம், 8-15 இஸ்லாமியபாடல்கள்,

344 மீற்றர் அல் 49 மீற்றர் பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை

344 மீற்றர் அல் 61 மீற்றர் மாலை 5-00 கல்வி ஒலிபரப்பு, 5-15 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்.

6-15 இசைப் பயிற்சி, 6-30 சித்திரம் - மான்புக்கு அஞ்சலி. எழுதியவர் எஸ். செல்வராஜா, 7-00 கிராமசஞ்சிகை, 8 00 முஸ்லிம் நிகழ்ச்சி, உருதுபேச்சு செய்திக்கடிதம் இஸ்லாமிய பாடல்கள். 9-30 பல்கலைக்கழக விரிவுரைகள், 9-45 நாகசுரம்- எம், பி. பாலகிருஷ்ணன்

## வரி விளம்பரம்

### தேவை

தையல்காரர்

எமது தையல் கடைக்குத் தையற்காரர்கள் தேவை. உடன் வரவும். —ரவி தையல்நிலையம், நெல்லியடி சந்தி, கரவெட்டி. 1810

ஆசிரியைகள்

ஜி. சி. ஈ. [உயர்தரம்] வகுப்புகளுக்கு கற்பிக்க விஞ்ஞான பட்டதாரி ஆசிரியைகளும், சிங்களம் கற்பிக்க ஆசிரியைகளும் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். ஸ்ரீ விக்னேஸ்வர வித்தியாலயம், அரசடி அம்மன்கோவிலடி, திருநெல்வேலி. 1546

### கல்வி

வகுப்புக்கள்

கலை / விஞ்ஞானம் / வர்த்தகம் [சாதாரண — உயர்தரம்] வகுப்புக்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர்களால் காலை/மாலை நடாத்தப்படுகின்றன.— யாழ். டியூட்டோரியல் கல்லூரி, நெல்லியடி சந்தி, கரவெட்டி. 1311

ஆங்கிலம்:

புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரியின் இளைப்பாறிய அதிபராலும், அனுபவமுள்ள இலங்கை/இந்திய பட்டதாரிகளாலும் காலை 8 தொடக்கம் மாலை 6 வரையும் ஆங்கிலப்பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. உடன்சேர்ந்து படிக்கவும். வர்த்தகக்கல்லூரி, பருத்தித்துறை 1301

வகுப்புகள்:

46 வருட வர்த்தகஆசிரியராலும், இலண்டன், இலங்கை, இந்திய பட்டதாரிகளாலும், இளைப்பாறிய கல்லூரி அதிபர்களாலும் விஞ்ஞானம் - கலை - வர்த்தகப் பாடங்களும், சிங்களம், ஆங்கிலம், தையல் முதலியன மார்கழி க.பொ.த. பரீட்சைக்கு கற்பிக்கப்படுகின்றன. இருபாலாருக்கும் விடுதி வசதியுண்டு. பார்வையிட்டு சேர்ந்து படிக்கவும். வேலுப்பிள்ளை ஆண், பெண் வர்த்தகக்கல்லூரி, பருத்தித்துறை. 1302

### விற்பனைக்கு

காணி:

சண்டிலிப்பாய் வடக்கில் தலைச்சிவோடை என்னும் 23 பரப்பு செம்பாட்டுக் காணி 500 பனையுடன் விற்பனைக்குண்டு. விபரம்: செல்லத்துரை சிவகாமிப்பிள்ளை, சண்டிலிப்பாய் வடக்கு என்பவருடன் தொடர்பு கொள்ளவும். 1306

கார்

நல்ல நிலையிலுள்ள 3 ஸ்ரீ 3306 மொறிஸ் ஒக்ஸ்போட் கார் விற்பனைக்குண்டு. காலையில் D. T. நைகிஸ் வேம்படி றோட், மெதடிஸ் தலைமைக் காரியாலயத்திலும் மாலையில் வழலாய் அச்சுவேலியிலும் பார்வையிடலாம். 1309


ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர், பாரதி, சோ
நடித்த
நான் யார் தெரியுமா?

MANOHARA
JAFFNA
Daily: 2-30, 6-30 & 9-45
Dev Anand, Sadhana
in
HUM DONO
(Hindi)

சில தினங்களுக்குமட்டும்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜிகணேசன்
நடிக்கும்
மனோகரா

REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P. M.
Gregory Peck &
Sophia Loren
in
ARABESQUE

சென்னையில் 100 நாட்களுக்கு ஓடிய சிறந்த வள்ளுவ காவியம்!
கெப்பிட்டல் (கொழும்பு) 2-00, 6-00, 9-30
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) 2-30, 6-30, 9-30
'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' — இதற்கு நீங்கள் சொல்லப்போகும் பதில்

மக்கள் திலகம்
எம். ஜி. ராமச்சந்திரன்
சரோஜாதேவி
எம். ஆர். ராதா
சௌகார் ஜானகி
பேபி ஷகிலா
தங்கவேலு
நடித்த





முத்துக்குமரன் பிக்சர்ஸ் அளிக்கும்
பெற்றால்தான் பிள்ளையா?
டைரக்ஷன்: திரு

"சூரியன் மார்க்"
வாசனை சந்தனப் பவுடர்
சந்தன வில்லைகள்
கோவில் தேவைகளுக்கும் திருமணம் முதலிய வைபவங்களுக்கும் உகந்தது.
கிடைக்குமிடம்:
சுந்தரம் பிரதர்ஸ்
73. மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டப்பொம்மனுக்கு முந்தியவன் கயிலைவன்னியன்

## நாடக நூல் வெளியீட்டு விழாவில் திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி.

மாந்தை, ஞாயிறு

"இலங்கையின் பண்டைய வரலாற்றை அறிய விரும்புவோர், நாகரீகம்-பண்பாட்டின் உறைவிடமாக விளங்கிய மாந்தை மாதோட்ட நன்னகர் பற்றி ஆராய வேண்டும். மாந்தையின் சிறப்பையும் மற்றும் பல உயர்ந்த கருத்துக்களையும் தன்னகத்தே கொண்டு டச்சு ஏகாதிபத்தியத்தை பதினேழாம் நூற்றாண்டில் எதிர்த்து பனங்காமத்தின் சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாத்த வன்னிமன்னன் கயிலை வன்னியனை முக்கிய பாத்திரமாகக் கொண்டு விளங்குவதுதான் 'தணியாத தாகம்' என்னும் இந் நாடக நூல்."

மேற்கண்டவாறு மன்னூர் அடம்பன் கலைவிழாவில் நடைபெற்ற 'தணியாத தாகம்' என்னும் வரலாற்று நாடகநூல் வெளியீட்டுவிழாவில் உரையாற்றிய திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், 'கயிலைவன்னியன் காலத்தில் கட்டப்பொம்மனுக்கு முந்தியவன். இவ்வீரனின் வரலாற்றை ஆராய்ந்து வருங்கால சந்ததியினரும் அறிந்து உணர்ந்து செயலாற்றும் பொருட்டு பல இன்னல்களுக்கூடே நாடக நூலாக வெளியிட்டுள்ளார் அரவை இழான். விழுமிய உணர்ச்சி ததும்பும் பாடல்களும் கருத்தாழம் மிக்க அழகுதமிழ் வசனங்களும், நெஞ்சை நெகிழவைக்கும் நிகழ்ச்சித் தொடரும் படிப்பவர் உள்ளத்தைத் தொடும் பொருளாதார சுதந்திரமும் அரசியல் சுதந்திரமும் நாட்டிற்குத்தேவையென்ற முக்கிய கருத்தை, நாடகத்தில் வரும் வேல் நம்பி என்னும் வீரன் 'ஒரு கையில் ஏரும் மறுகையில் வேலும் கொண்டு உழைக்க வேண்டும்' என அழகாகக் கூறுகின்றான்' எனக்கூறினார்.

இந்நாடகநூலை வெளியிட்டு உரையாற்றிய கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் 'பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்கள் வரலாற்று நாடகத்துறையில்' காட்டிய வழியில் 'அரவை இழான்' அவர்கள் 'தணியாத தாகம்' என்னும் இந்நாடகநூலை ஆக்கியுள்ளார். வரலாற்று நாடகங்களுக்கு பஞ்சம்ஏற்பட்டுள்ள இக் காலத்திலே இத்தகையதொரு சிறந்த நாடகம் நூல்வடிவில் வெளிவருவதை நாம் வரவேற்கவேண்டும். நாட்டுமக்களுக்கு நாட்டுப்பற்றையும் மொழிப் பற்றையும் ஊட்டும் தன்மை வாய்ந்தது இந்நாடகம்' எனக் கூறினார்.

மன்னூர் நாடக அபிவிருத்தி சபாவின் சார்பாக நாடக ஆசிரியருக்கு திரு. அமிர்தலிங்கம்பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். ஈற்றில்நாடகாசிரியர் நன்றி கூறினார்.

---

திருமலை பஸ் விபத்து

# ஆபத்திலிருப்பவரைகாப்பாற்ற ஆஸ்பத்திரியில் இரத்தமில்லை

## வீடுவீடாகச் செல்கிறார்கள் டாக்டர்கள்

திருகோணமலை, ஞாயிறு

அண்மையில் ஏற்பட்ட பஸ் ரயில் விபத்தில் படுகாயமடைந்தவர்கள் மிகவும் அபாயகரமான நிலையில் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குத் தேவையான இரத்தம் இரத்த வங்கியில் இல்லாத காரணத்தால் இவ்வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர்கள் வீடுவீடாகச்சென்று இரத்தம் தரும்படி கேட்க வேண்டிய நிலையேற்பட்டதாக அறியப்படுகிறது.

இதன் காரணமாகதேயிலை நிர்வாக ஸ்தாபனத்தின் ஊழியர்கள் வைத்தியசாலைக்குச் சென்று இரத்ததானம் செய்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மரணமானவர்களைத் தவிர வேறு இருவரின் உடல்நிலை கவலைக்கிடமானதாக இருப்பதாகவும் இருபதுக்குமதிகமானோர் இன்னும் அபாயகரமான நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் பலபாகங்களிலிருந்தும் மக்கள் இவ்வைத்தியசாலைக்கு வருவதால், வைத்தியசாலையில் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

## யாழ். ......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார சம்பந்தமான கடமையுணர்வுகளை ஊட்டுவதாகுமென்றும் ஆணையாளர் தெரிவித்துள்ளார். சுவர்களில் சினிமா சுவரொட்டிகளை அப்புறப்படுத்துவதில் தொண்டர்கள் ஈடுபடுவார்கள். சுகாதாரவாரம் முடிந்தபின்னர் சுவரொட்டி விளம்பரங்களை சுவர்களில் ஒட்டவேண்டாமென வி[illegible]ப்பாளர் கோரப்பட்டுள்ளனர்.

இன்றுகாலை 7-30 மணிக்கு மாநகரசபையின் கொடியேற்றவிழா மாநகர முன்றலில் நடைபெறும். இவ்விழாவையொட்டி, சிரமதானவேலையில் ஈடுபட்டுத் தொண்டாற்ற பல உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் முன்வந்துள்ளனர்.

குடிநல சுகாதாரவார கொண்டாட்டம், பயன்தரக்கூடிய ஓர் அரிய முயற்சி என்றும், இதனால் ஏற்படும் விளைவுகள் நலன்பயப்பனவாக அமையுமென்றும், பிரதமர் அனுப்பியுள்ள செய்தியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். நகரைச் சுத்தமாகவும், வனப்பு மிக்கதாகவும் மிளிரச் செய்யவேண்டியது நகரமக்கள் ஒவ்வொருவரினதும் பொறுப்பும் கடமையுமாகுமென்றும், யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அனுப்பியுள்ள செய்தியொன்றில் குறிப்பிட்டுள்ளார். யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா அனுப்பியுள்ள செய்தியில், தன் பாராட்டைத் தெரிவித்துள்ளார்.

---

# ஐயாறன்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

கும் பெரிய ஒற்றுமை சக்தியாக விளங்குவதைக் கண்டேன்.

கலை அரசு அவர்கள் ஆசி கூறி பேசுகையில், அரசாங்க அதிபருக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார் வடஇலங்கை கலைஞர்களை தென்னிலங்கையிலும் தென்னிலங்கை கலைஞர்களை, வடஇலங்கையிலும் அறிமுகப்படுத்தி கலைநிகழ்ச்சிகளுக்கு ஒழுங்கு செய்தால், இருபகுதி மக்களுக்குமிடையில் வேற்றுமை நீங்கவும் நல்லுறவும் நட்பும் பெருகுமென்றும் அவர் கூறியபோது சபை கரகோஷம் செய்து வரவேற்றது. அரசாங்க அதிபர் இதைச் செய்வாரா?

ஃ ஃ ஃ

கலை உலகு பெருமை கடாக இருப்பதாயும், நேர்மையற்ற பித்தலாட்டங்கள் பல அதில் உள்ளதாகவும் அதிபர் தமது பேச்சின்போது வருத்தத்துடன் கூறினார். யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, கொழும்பிலும் உலகநாடுகளிலும்கூட அவ்விதமிருக்கின்றதென்றும் சொல்லி வருந்தினர். கலையின் நோக்கம் மனிதரைத் தெய்வத்திடம் கொண்டு செல்லுவதைவிட்டு, கீழ்த்தரமானவையாக தாழ்வதால் தான் இந்த அவலநிலை இதை உணர்ந்து, கவனமாக நடக்கும் கலைஞர்களுக்கு மேன்மேலும் உயர்வுண்டு 'கலைக் களங்கத்தை'ப் பற்றி அவர்கள் அஞ்சத்தேவையில்லை. கலைத்தெய்வம் அவர்களைப் பாதுகாக்கும் என்பது உறுதி.

ஃ ஃ

செல்வ நெடுமாடம்
சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச்
சிற்றம்பலமேய
செல்வன் கழலேத்தும்
செல்வஞ் செல்வமே

—திருஞானசம்பந்த சுவாமிகள்

---

## முன்னாள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

லய நிருபர் பேட்டிகண்டபோது, தாம் செயற்குழுக் கூட்டத்திலிருந்து வெளியேறியது மாத்திரமல்லாமல் செயற்குழுவிலிருந்தும்விலகுவதற்கான ராஜினாமாக் கடிதத்தை இன்று அனுப்பவிருப்பதாகவும் கூறினார்.

தமிழரசுக்கட்சியின்கொள்கையில்ஒன்றான சமூக குறைபாடுகள் ஒழிப்பிலிருந்து கட்சி தறபொழுது விலகிவிட்டதாலேயே தாம் ராஜினாமாச் செய்யப்போவதாக அவர் தெரிவித்தார்.

[கா.நி]

---

## வெள்ளை அறிக்கையும்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

யில் மகாநாட்டை ஆகஸ்ட் மாதத்திற்கு முன் வைக்க வேண்டுமெனச் சிலர் கருத்துத் தெரிவித்தனராம்.

இக்கூட்டத்தில், அடுத்த பொதுத் தேர்தல் பற்றிய பேச்சு எழுந்தபோது, கட்சிப் பிரசாரத்தில் தொகுதிகள் தோறும் மும்முரமாக ஈடுபடும்படி வாலிப முன்னணியினருக்குத் தெரிவிக்கப்பட்டதாம்.

---

## இடமாற்றம்

ஊர்காவற்றுறை' ஞாயிறு

சரவணை நெசவு நிலையத்தில் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய திரு. ச. சுப்பிரமணியம் நெடுந்தீவு ஐக்கிய நெசவாளர் சங்க நெசவு நிலயத்திற்கு ஜூன் முதலாந் திகதி முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

---

# 'நடக்கிற நேரம் தேர்தல் நடக்கும்'

## யாழ். மாநகரசபை பற்றி திரு. திருச்செல்வம்

யாழ்ப்பாணம், திங்கள்

'யாழ்ப்பாணம் மாநகர சபைத் தேர்தல் நடக்கும், அது நடக்கவேண்டிய சமயத்தில் நடக்கும்' என்று யாழ்ப்பாணம் வந்திருந்த உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் நேற்றுத்தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாநகர சபையின் விசேஷ ஆணையாளர்களுடன் யாழ்ப்பாண மாநகரசபையின் திட்டங்கள் செயல்கள் பற்றி அமைச்சர் கலந்தாலோசனை செய்ததாகவும் அவர்களிடமிருந்து அறிக்கை கிடைத்ததும் தேர்தல்பற்றி அமைச்சர் ஆலோசனை செய்வாரெனவும், அறியப்படுகிறது.

---

# ஜி. சி. ஈ. கட்டண உயர்வால் பெற்றோர், மாணவர் கவலை

உடுப்பிட்டி, ஞாயிறு

இவ்வருடம் முதல் ஜி. ஸி. ஈ. [சாதாரணம்] பரீட்சைக்குரிய பிரவேசக் கட்டணப்பணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. முன்பு 25 ரூபாவாக இருந்த கட்டணப் பணம் தற்பொழுது 30 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. இக் கட்டணத்தை முன்னரைவிட 5 ரூபா அதிகமாகக் கூட்டியுள்ளதை வருத்தத்துடன் தெரிவிப்பதாகப் பரீட்சைப் பகுதியினர் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு விண்ணப்பத்திரத்துடன் அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளனராம்.

பரீட்சார்த்திகள் தோற்றும் முதல் பாடத்திற்கு 10 ரூபாவும், மேற்படும் ஒவ்வொரு பாடங்களுக்கும் 5 ரூபாவும், நான்கு பாடங்களுக்கு 25 ரூபாவும் ஐந்து பாடத்திற்கும் அதற்கு மேற்படும் முழுப் பாடங்களுக்கும் 30 ரூபாவும் கட்டணமாகச் செலுத்தவேண்டும்.

---

## 31ல் புதிய தலைவர் தெரிவு

குரும்பசிட்டி, ஞாயிறு

மல்லாகம் கிராமசபையின்புதியதலைவர்தெரிவு இம்மாதம்31ம் திகதிநடைபெறவிருக்கிறது கிராமசபைக் காரியாலயத்தில் உதவி ஸ்தல ஸ்தாபன ஆணையாளர் திரு. எஸ். முருகவேள் தலைவர் தேர்தலுக்குத் தலைமை வகிப்பார். திரு. வ. சரவணமுத்து, திரு. ஏ. எஸ். தாமோதரம்பிள்ளை ஆகிய இரு அங்கத்தவர்கள் தலைவர் பதவிக்குப் போட்டியிடுகின்றனர் எனத் தெரிகிறது.

---

## வெள்ளை அறிக்கையின்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

தில் ஊர்காவற்றுறை எம். பி, திரு. வி. நவரத்தினத்தைக் கட்சியிலிருந்து வெளியாக்கியதுபற்றி குறிப்பிட்டிருந்தது. இதைப்பற்றிய விரிவான விளக்கத்தை ஊர்காவற்றுறை மாவட்டக் கிளையில் உள்ள ஒவ்வொரு அங்கத்தவருக்கும் அனுப்புவதெனவும் கிளைகளுடன் இதுபற்றி தொடர்பு கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாண வானொலி நிலையம் விடையமாக செனட்டர் நடராசா ஒலிபரப்பு மாஅதிகாரியுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள்பற்றி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. கூடியவிரைவில் இந்நிலையத்தை நிறுவ ஆவன செய்வதென தீர்மானிக்கப்பட்டது.

பாவனைப் பொருட்கள் கட்டுப்பாடுச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஒரு பிரேரணையும் சமர்ப்பிக்கப்பட்டது. பருத்தித்துறை, கோப்பாய், உடுவில் முதலிய இடங்களின் எம். பி.க்கள் இதைச் சமர்ப்பித்து அந்நகல்களை அரசாங்க அதிபருக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

இன்றைய அரசியல் நிலைமைபற்றியும் மாவட்ட சபை மசோதாபற்றி பிரதமருடன் நடத்திய பேச்சுவார்த்தைபற்றியும்பொதுச் செயலாளர்திரு. ஏ. அமிர்தலிங்கம் கூட்டத்தில் விளக்கியதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## 'அத்த'வின் கேள்வி

கொழும்பு, ஞாயிறு

சிங்களவர்களும், முஸ்லிம்களும், சிறுபான்மைத் தமிழர்களும், திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையிலுள்ள தமிழ்க்காங்கிரஸும் யூ. என். பி.யைச் சேர்ந்த பல எம். பி.களும். யூ. என். பி.யைக் கடந்த தேர்தலில் ஆட்சிக்கு வர உதவிய மகாசங்கமும் எதிர்க்கும் போது யாருக்காக மாவட்ட சபை கொண்டுவரப்படுகிறது.

சிங்களத் தினசரியான 'அத்த' பத்திரிகையின் 23ந் தேதி இதழ் தலையங்கத்தில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அத்தலையங்கத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: டட்லி சேனநாயக்கா, செல்வநாயகம் ஆகியோரின் நன்மைக்காகவே இம் மசோதா கொண்டுவரப்படுகிறது. இரண்டு தனிப்பட்ட நபர்களின் விருப்பத்திற்கு நாட்டின் முழு எதிர்ப்பும் கட்டுப்படுவதா? சிறு சிறு விஷயங்களுக்கெல்லாம் அறிக்கை விடும் அரசாங்கம் மாவட்டசபை விஷயத்தில் மௌனம் சாதிக்கிறது.

---

## "மறையாது நிற்கும்"

சாவகச்சேரி, ஞாயிறு

'கலாநிதி' கணபதிப்பிள்ளை மறைந்துவிட்டாலும் அவரது படைப்புக்கள் மறையாது என்றும் நிலைத்து நிற்கும்" எனத் தென்மராட்சி இலக்கிய மன்றம் மறைந்த கலாநிதிக்கு அஞ்சலிசெலுத்தியுள்ளது. ஈழம் தந்த தமிழ்ப் பேரறிஞர்களான சி. வை. தாமோதரம்பிள்ளை நாவலர், சுவாமி ஞானப்பிரகாசர், விபுலானந்த அடிகள் ஆகியோரின் வரிசையிலே தோன்றியவர் கணபதிப்பிள்ளை எனவும் தெரிவிக்கப்பட்டது.

---

## "ஒலிம்பிக் ஹேம்ஸ்"

சுழிபுரம், ஞாயிறு

விளையாட்டு அமைச்சினால் உதவப்பட்ட 'ஒலிம்பிக்' விளையாட்டுகள் என்ற படம் சுழிபுரம் அம்பாள் படமாளிகையில் நேற்று காண்பிக்கப்பட்டது.

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தா[illegible] கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள [illegible] ஆண்டு மே மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org